


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தோட்டக்கலைதுறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, முளகுமூடு, கல்லுவிளை, ஆசீர் கலையரங்கத்தில் வாழை சாகுபடி கருத்தரங்கம் இன்று (30.08.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 581/2016 நாள்: 30.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வாழை சாகுபடி கருத்தரங்கம் இன்று (30.08.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தோட்டக்கலைதுறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, முளகுமூடு, கல்லுவிளை, ஆசீர் கலையரங்கத்தில் வாழை சாகுபடி கருத்தரங்கம் இன்று (30.08.2016) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தலைமையேற்று தெரிவித்ததாவது:-

இந்தியாவில் தமிழ்நாடு, வாழை உற்பத்தியில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. வாழைபழம் மட்டுமின்றி இலை, பூ, தண்டு போன்ற பாகங்களும் உணவு பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, வாழைத் தண்டுகள், சிறுநீரக கோளாறுகளை சரி செய்யவும், விஷக்கடி மருத்துவத்திலும் பயன்படுகிறது. வாழை அதிகமாக சாகுபடி செய்யும் மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்றாகும். நமது மாவட்டத்தை பொறுத்தவரையில் மட்டி, செங்கதலி, நேந்திரன் மற்றும் செவ்வாழை போன்ற இரகங்கள் 6,100 ஹெக்டரில் பயிரிடப்படுகின்றன. தரமான வாழைக்கன்றுகள் தேர்வு செய்து, சிறந்த தொழில் நுட்பங்களான சொட்டு நீர்பாசனம், உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் அறுவடை பின் செய் நேர்த்தி செய்தல் போன்றவற்றை கடைபிடித்து, சிறந்த முறையில் வாழை சாகுபடி செய்து, அதிக லாபம் பெறுவதற்காக, இரண்டு நாள் கருத்தரங்கம் இன்று (30.08.2016) மற்றும் நாளை (31.08.2016) நடைபெறுகிறது. இந்த கருத்தரங்கத்தில், வாழையில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் குறித்து திருச்சி, தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின், தோட்டக்கலை துறையின் முதன்மை விஞ்ஞானி முனைவர். வி.குமார் அவர்களும், வாழையில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து முதன்மை விஞ்ஞானி முனைவர் கே.ஜெ.ஜெயபாஸ்கரன் அவர்களும், வாழையில் மதிப்பு கூட்டுதல் குறித்து முதன்மை விஞ்ஞானி முனைவர். கே.என்.சிவா அவர்களும், வாழையில் நீர் நிர்வாகம் குறித்து பேச்சிப்பாறை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் உதவி பேராசிரியர் (தோட்டக்கலை) முனைவர். எஸ்.டி. பினி சுந்தர் ஆகியோர்களால், வாழை சாகுபடி மற்றும் அதிக லாபம் எவ்வாறு பெறுவது குறித்து விளக்கவுரையாற்றவுள்ளார்கள்.

இந்த கருத்தரங்கத்தில் வழங்கப்படும் அறிவுரைகளை நீங்கள் பின்பற்றுவதோடு, உங்கள் வீட்டு அருகில் உள்ள மற்ற வாழை விவசாயிகளுக்கு இதனை எடுத்து கூற வேண்டும். மேலும் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், அதனை நீங்கள் கேட்டு, இந்த வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டு, வாழை சாகுபடி செய்து, அதிக லாபம் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்த கருத்தரங்கத்தில் ஒன்பது வட்டாரத்திலிருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட வாழை விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பான முறையில் வாழை சாகுபடி செய்த 12 விவசாயிகளுக்கு, நினைவு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி, பாராட்டினார்.

இதற்கு முன்பாக வாழை ரகங்கள் மற்றும் தோட்டக்கலை துறை சார்பாக வைக்கப்பட்டிருந்ததை கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (வோண்மை) திரு. என். இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. எம். நிஜாமுதீன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. எம். அசோக் மேக்ரின், செயற்பொறியாளர் திரு. பி. ஆனந்தராஜா, வேளாண்மை துணை இயக்குநர் திரு. வி.ஆர். சுரேஷ் ஜோஸ், தோட்டக்கலைத்துறை துறை உதவி இயக்குநர் திருமதி. யோ. ஷீலா ஜாண், தோட்டக்கலை அலுவலர் திரு. கார்த்திக் மற்றும் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.